DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI.

STC–118/2024

Prosecution witness – PW 5

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு.சாந்தகுமார் | Caste: | |
| Father's Name | : | Calling: | |
| Village | : | Religion: | |
| Taluk | : | Age: | |

(A2 present.A1 absent. petiton u/s.317 Cr.P.Cfiled and allowed)

23.02.2026 – 12.30 PM

முதல் விசாரணை:–

1. நான் பூலாங்குளம் கிராமத்தில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 முதல் 4 வரை எனக்கு தெரியும்.

2. கடந்த 27.01.2019ந் தேதி இரவு 09.15 மணியளவில் நான் எனது ஊரில் இருந்த போது எனது அண்ணன் அற்புதராஜ் எனக்கு போன் செய்து அவர் அன்றைய தினத்தில் இரவு 09.15 மணியளவில் சிக்கலிலிருந்து பூலாங்குளம் நோக்கி இன்னோவா கார் TN 11 J 0555 என்ற வாகனத்தில் வந்து கொண்டிருந்த போது பன்னந்தை பேருந்து நிறுத்தம் அருகே எதிரிகள் லல்லுபிரசாத், திலகராஜ் ஆகிய இரவரும காரை மறித்து கீழே இறங்கு உன்னை அடிக்காமல் விடமாட்டேன் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும, எனது அண்ணனை கம்பாலும், கையாலும் அவரை தாக்கியதாகவும், சாட்சி அப்போதுசொன்னார் அப்போது எனது மாமா டேவிட் சாலமனும், நானும் சம்பவ இடத்திற்கு சென்றோம். அங்கிருந்து எனது அண்ணனை அழைத்துக்கொண்டு சிக்கல் காவல்நிலையத்திற்கு சென்றோம் எனது அண்ணன் நடவடிக்கை எடுக்க வேண்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலீசார் விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: –</u>**

நான் முதல் விசாரணையில் கூறிய விவரங்களை தான் போலீசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். அற்புதராஜ் எனது உடன் பிறந்த சகோதரர். சாட்சி டேவிட் சாலமோன் உட்பட மற்ற சாட்சிகள் எனது உறவினர்கள் என்றால் சரிதான். எனது அண்ணன் அற்புதராஜ் மீது பிரசாத்தின் மாமா சக்கர பாண்டி ஒரு புகார் கொடுத்து அதை நீதிமன்றத்தில் சமரசமாக முடிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது அண்ணனுக்கும், எதிரிகளுக்கும் தேர்தல் சம்மந்தமாக முன்விரோதம் இருந்தது என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கு சம்பவத்தில் காயம் ஏற்படவில்லை என்றால் சரிதான். இன்னோவா காரில் எனது அண்ணன் பள்ளி வளாகத்தில் உள்ள சுவரில் மோதிவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும நடைபெறவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

ஓம்/சாதுசிவசுப்பிரமணியன்,
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி